# கருப்பை வாய் ஸ்கிரீனிங் குறித்து நீங்கள் என்ன தெரிந்துகொள்ள வேண்டும்.

## கருப்பை வாய் ஸ்கிரீனிங் என்றால் என்ன?

கருப்பை வாய் என்பது கருப்பை வாய் புற்றுநோய் ஏற்படும் அபாயமுள்ள, ஆனால் எந்த அறிகுறிகளும் இன்றி பொதுவாக நன்றாக உணரக்கூடியவர்களிடத்தில் செய்யப்படும் ஒரு சோதனையாகும். ஒன்டாரியோ கருப்பை வாய் ஸ்கிரீனிங் திட்டம் என்பது இத்தகையோரை தொடர்ந்து நுண்ணாய்வு செய்துகொள்ள ஊக்குவிக்கும் ஒரு ஸ்கிரீனிங் திட்டமாகும். தொடர்ச்சியாக கருப்பை வாய் ஸ்கிரீனிங் செய்துகொள்வது கருப்பை வாய் புற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்க உதவும்.

கருப்பை வாய் புற்றுநோய் என்பது கர்ப்ப வாயில் ஏற்படும் புற்றுநோயாகும். கர்ப்ப வாய் என்பது கருப்பையை பெண்குறியுடன் இணைக்கும் ஓர் உடல் பாகமாகும். கர்ப்ப வாய் புற்றுநோய் பெரும்பாலும் ஹியூமன் பாப்பிலோமா வைரஸினால் (HPV) ஏற்படுகிறது. உங்கள் குடும்பத்தில் மற்றவர்களுக்கு கர்ப்ப வாய் புற்றுநோய் இருப்பதாலேயே உங்களுக்கும் கர்ப்பவாய் புற்றுநோய் ஏற்பட வேண்டிய **அவசியமில்லை**.

### ஹியூமன் பாப்பிலோமா வைரஸ் (HPV) என்றால் என்ன?

HPV என்பது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு பாலுறவின் வாயிலாகக் கடத்தப்படும் ஒரு வைரஸ் ஆகும். பாலுறவில் பல்வேறு விசயங்கள் அடங்கலாம். இந்த தகவல் தாளில் எந்த நேரத்திலும் வேறொரு நபர் உங்கள் பிறப்புறுப்புடன் (அந்தரங்க உறுப்புகள்) தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது அடங்கியுள்ளன. இந்தத் தொடர்பானது கைகள், வாய் அல்லது பிறப்புறுப்புகளால் செய்யப்படலாம்.

HPV என்பது பொதுவானது. பெரும்பாலும் எந்தத் தீங்கும் ஏற்படுத்தாமல் தானாகவே நீங்கிவிடும்.

HPV யில் 100க்கும் மேற்பட்ட வகைகள் உள்ளன. இவை கர்ப்ப வாய் அணுக்களில் மாற்றங்கள் ஏற்படக் காரணமாகக்கூடும். **சிலவகை** HPVகளில், இந்த அணு மாற்றங்களுக்கு சிகிட்சை அளிக்கப்படாவிட்டால் காலப்போக்கில் கர்ப்பவாய் புற்றுநோயாக மாறக்கூடும்.

### கருப்பை வாய் ஸ்கிரீனிங் சோதனை என்றால் என்ன?

கருப்பை வாய் ஸ்கிரீனிங் சோதனையில் சிலநேரங்களில் கருப்பை வாய் புற்றுநோயாக மாறக்கூடிய HPV வகை உள்ளதா எனச் சோதிக்கப்படுகிறது. இந்த வகை HPVகளால் ஏற்படும் கர்ப்ப வாய் அணு மாற்றங்களுக்காகவும் இது சோதிக்கப்படுகிறது. இந்தச் சோதனையில் பிற வகையான HPV **சோதிக்கப்படுவதில்லை**.

பாப் சோதனைக்குப் (Pap test) பதிலாக கருப்பை வாய் ஸ்கிரீனிங் சோதனை இப்போது செய்யப்படுகிறது. காரணம் கருப்பை வாய் புற்றுநோயைத் தடுக்க இது நன்கு உதவுகிறது.

### யார், எப்போதெல்லாம் சோதனை செய்துகொள்ள வேண்டும்?

ஒன்டாரியோ கருப்பை வாய் ஸ்கிரீனிங் திட்டம் கருப்பை வய் ஸ்கிரீனிங்குக்குத் தகுதிபெறும் பெரும்பாலானோர் 5 **ஆண்டுகளுக்கு** ஒருமுறை சோதித்துக்கொள்ளப் பரிந்துரைக்கிறது.

- நீங்கள் கீழ்க்கண்ட நபராக இருந்தால் சோதனை எடுத்துக்கொள்ளலாம்:
  - குறைந்தது 25 வயது, மற்றும்
  - பெண், இருபாலினத்தவர், திருநம்பி அல்லது கருப்பை வாய் உள்ள பாலிலி, மற்றும்
  - இன்னொருவருடன் எப்போதாவது பாலுறவு கொண்டிருந்தால், மற்றும்
  - பெண்ணுறுப்பிலிருந்து (பிறப்புறுப்பு வாய்) மாறுபட்ட இரத்தப்போக்கு அல்லது வெளியேற்றத்துக்கான (தெளிவாக அல்லது மஞ்சள் திரவம்) போன்ற அறிகுறிகள் இல்லை
- பின்வரும் காரணங்களுக்காகவும் நீங்கள் சோதனை எடுத்துக்கொள்ள வேண்டும்:
  - HPV தடுப்பூசி எடுத்துக்கொண்டவர்
  - ஆரோக்கியமாக உணர்பவர்
  - மாதவிடாய் நிற்கும் சமயம்
  - கருப்பை வாய் புற்றுநோய் உள்ள குடும்ப உறுப்பினர்கள் யாரும் இல்லை
  - ஒரேயொரு நபருடன் மட்டுமே பாலுறவு கொண்டிருப்பவர்
  - ஒரே பாலுறவு துணையை வெகுகாலம் கொண்டிருப்பவர்
  - வெகுகாலம் பாலுறவு கொண்டிருக்காதவர்
  - ஒரே பாலினத்தவருடன் பாலுறவு

Ontario Health
Cancer Care Ontario

உங்கள் நோயெதிர்ப்பு அமைப்பு பலவீனமாக இருந்தால், நீங்கள் ஒவ்வொரு **3 ஆண்டுகளுக்கு ஒருமுறை** கருப்பை வாய் ஸ்கிரீனிங் எடுக்க வேண்டும். உதாரணமாக, உங்களுக்கு HIV/AIDS இருந்தால் அல்லது உறுப்பு மாற்று அறுவை சிகிட்சை செய்திருந்தால்.

கருப்பை வாயினில் அணு மாற்றங்களுக்கு சிகிட்சை பெற்ற பின்னும் கருப்பை வாய் ஸ்கிரீனிங் செய்யப் பரிந்துரைக்கப்படுகிறது. இந்தச் சிகிட்சை முடிவுகளின் அடிப்படையில், உங்கள் மருத்துவர், செவிலியர் அல்லது தாதியானவர் எப்போதெல்லாம் நீங்கள் சோதனை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உங்களுக்குத் தெரியப்படுத்துவார்.

பெரும்பாலானோர் 65 முதல் 69 வயதில் கருப்பை வாய் ஸ்கிரீனிங்கை நிறுத்திவிடலாம். 69 வயதுக்குப் பிறகும் நீங்கள் சோதனை எடுத்துக்கொள்ள வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க உங்கள் மருத்துவர், செவிலி அல்லது தாதி உதவக்கூடும்.

## கருப்பை வாய் ஸ்கிரீனிங் சோதனையின்போது என்ன நிகழ்கிறது?

கருப்பைவாய் ஸ்கிரீனிங் சோதனை பாப் சோதனை போன்றதே. மருத்துவர், செவிலி அல்லது தாதி ஒரு சிறிய, மிருதுவான தூரிகையைப் பயன்படுத்தி கருப்பை வாயிலிருந்து அணுக்களைச் சேகரிப்பார். இது ஆய்வகத்தில் HPV வகைகளுக்காகவும் அணு மாற்றங்களுக்காகவும் சோதனை செய்யப்படும். உங்கள் சோதனையை மேற்கொள்ளும் நபர், உங்களுக்கு முடிந்தவரை இந்தச் சோதனையை வசதியானதாக ஆக்க முயற்சிப்பார்.

## கருப்பை வாய் ஸ்கிரீனிங் சோதனைக்குப்பின் என்ன நிகழ்கிறது?

உங்கள் கருப்பை வாய் ஸ்கிரீனிங் சோதனை முடிவினை அஞ்சலில் பெறுவீர்கள். உங்கள் சோதனையைச் செய்த நபருக்கும் உங்கள் முடிவின் நகல் கிடைக்கும். உங்களுக்கு இருக்கும் ஏதேனும் கேள்விகளுக்கு அவரால் பதிலளிக்க முடியும். அடுத்த படிநிலைகள் குறித்தும் அவர்களால் உங்களுடன் பேச முடியும்.

கருப்பை வாய் புற்றுநோய்க்கு சிலநேரங்களில் காரணமாகக்கூடிய HPV வகை இருப்பதாலேயே உங்களுக்கு கருப்பை வாய் புற்றுநோய் இருப்பதாக அர்த்தமில்லை. ஆனால் நீங்கள் **கருப்பைவாய் கால்போஸ்கோப்பி** (பெண் உறுப்பினுள் ஆய்வுமானி) என்றழைக்கப்படும் சோதனை எடுக்க வேண்டியிருக்கலாம்.

கருப்பைவாய் கால்போஸ்கோப்பி என்பது மகளிர் மருத்துவ நிபுணர் போன்ற சிறப்பு மருத்துவரால் செய்யப்படுகிறது. கால்போஸ்கோப்பியின்போது, ஏதேனும் இயல்புக்கு மாறாக உள்ளதா என்பதைக் காண கருப்பை வாய் ஸ்கிரீனிங் சோதனையைக் காட்டிலும் கருப்பை வாயை மேலும் நெருக்கமாக சிறப்பு மருத்துவர் சோதிக்கிறார். கால்போஸ்கோப்பி செய்துகொள்வது கருப்பை வாய் புற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்க உதவும்.

## கருப்பை வாய் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பில் தாக்கத்தை ஏற்படுத்துபவை எவை?

தொடர்ந்து சோதனை செய்துகொள்வதால் கருப்பைவாய் புற்றுநோய் ஏற்படும் அபாயத்தைக் குறைக்க முடியும். வயது கூடுதல், புகைபிடித்தல் மற்றும் இன்னொருவருடன் பாலுறவு கொண்டிருந்தால், கருப்பை வாய் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கிறது. கருப்பை வாய் புற்றுநோ ஏற்படும் உங்கள் வாய்ப்பில் தாக்கத்தை ஏற்படுத்துபவை குறித்து மேலும் அறிந்துகொள்ள mycanceriq.ca என்ற தளத்தைப் பார்வையிடவும்.

## உங்கள் சோதனைக்கு நேர ஒதுக்கீடு பெறுவது எப்படி?

உங்கள் மருத்துவர், செவிலி அல்லது தாதியை அழைத்து உங்களுக்குச் சோதனை மேற்கொள்ள வேண்டுமென்று கேளுங்கள்.

-அல்லது-

கருப்பை வாய் ஸ்கிரீனிங் சோதனைகளைச் செய்யும் கிளினிக்கை கண்டறிய எந்த நேரத்திலும் Health811 பயன்படுத்துங்கள்:

- Ontario.ca/healthservices தளத்தில் "கருப்பை வாய் ஸ்கிரீனிங் சோதனை" என்று தேடுங்கள்
- 811 (TTY: 1.866.797.0007) என்ற எண்ணை அழைக்கவும்
- Ontario.ca/health811 தளத்தில் நேரலை உரையாடலைப் பயன்படுத்துங்கள்

## மேலும் தகவல்களுக்கு வருகை தாருங்கள்: ontariohealth.ca/cervical-test

இந்தத் தகவல்கள் அணுகக்கூடிய வடிவில் வேண்டுமா? 1-877-280-8538, TTY 1-800-855-0511, info@ontariohealth.ca.
Document disponible en français en contactant info@ontariohealth.ca.